# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1806 - 2013 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2013.04.12

*1806 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 501 |


**கவனிக்க.-** (i) பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஏர்ல் குணசேகர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் - 2013
(சிங்களம், தமிழ், ஆங்கில மொழி)

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க இலங்கை ஆசிரியர் சேவையில் 3-1 தரத்துக்கு பட்டதாரி ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமைகள் :**

1.1 பொதுத் தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் கொண்டவராய் இருத்தல் வேண்டும் ;
(iii) 2013.05.03 ஆந் திகதியன்று வயது 18 இற்குக் குறையாது மற்றும் 35 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

1.2 கல்வித் தகைமைகள் :

(i) இலங்கை ஆசிரிய சேவையின் பிரமாணக் குறிப்புக் கமைய 2013.05.03 ஆந் திகதியன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் செல்லுபடியாகும் மற்றும் கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட பாடத் துறைகளில் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். அப்பட்டம் தொடர்ந்துள்ள பிரதான பாடங்களுக்கு உரிய ஆசிரிய வெற்றிடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட வாறு சித்தியடைந்திருக்க வேண்டும் :-

* க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 திறமைச் சித்திகளுடன் தாய்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

* க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சை மற்றும் அதற்குச் சமமாக ஏற்றுக்கொள்ளப்படும் பரீட்சைகளில் சித்தியடைந்தோரும் விண்ணப்பிக்க முடியும்.

2. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை மற்றும் சேவை நிபந்தனைகள் :**

2.1 இவ்வறிவுறுத்தலுக்கு உரியதாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரர்களால் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தத்துக்கு அமைய முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு உரிய ஆசிரியர் எண்ணிக்கைக்காக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர்.

2.2 மேற்கூறப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளுக்கு அமைய முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக நியமனம் வழங்கத் தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2.3 காணப்படும் வெற்றிட எண்ணிக்கையைவிடக் குறைந்த விண்ணப்பதாரர்கள் ஏதேனும் பாடத்திற்காக விண்ணப் பிக்கும் பட்சத்தில் அப்பாடத்துக்குரியதாக போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2.4 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளும் சீர்திருத்தங்களுக்கு உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கை ஆசிரியர் சேவையில் 3-1 தரத்துக்கு நியமிக்கப்படுவர். இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு (2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 6/2006 (iv) இற்கமைய) ரூபா 14,135 - 180 X 9-240 X 6-330 X 5-400 X 7-645 X 13-ரூபா 30,030 ஆகும். ரூபா 15,755 ஐ தாண்டுவதற்காக 2 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துக்குப் பதவியுயர்வையும், ரூபா 18,515 ஐத் தாண்டுவதற்காக 2 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துக்குப் பதவியுயர்வையும், ரூபா 21,245 ஐத் தாண்டுவதற்காக I ஆம் வகுப்புக்குப் பதவியுயர்வையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தாங்கள் இச்சம்பள அளவின் 8 ஆம் கட்டமான ரூபா 15,395 மாதாந்த சம்பள அளவில் நிறுவப்படுவீர்கள்.

2.5 இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பளம் கொண்டதுமாகும்.

2.6 பதவியுயர்வு இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்படும்.

2.7 பட்டத்துக்குத் தொடர்ந்துள்ள பிரதான பாடங்களின்கீழ் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டியதுடன் நியமனப் பாடம் எக்காரணங்கொண்டும் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

3. **விண்ணப்பிக்கும் முறை :**

3.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் "ஏ4" அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரித்து பரீட்சார்த்தியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். 1.0 தொடக்கம் 3.5 வரையான தலைப்பு முதலாவது பக்கத்திலும்

4.0 தொடக்கம் 7.0 வரை இரண்டாம் பக்கத்திலுமாக விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டுமென விசேடமாகக் கருத்திற்கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் (விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.) பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கு அமைவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3.2 விண்ணப்பிக்கும் பாடங்கள் எக்காரணங்கொண்டும் மாற்றியமைக்கப்பட மாட்டாது என்பதுடன் அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பிலும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. அத்துடன் **ஒரு பரீட்சார்த்தி ஒரு விண்ணப்பப்படிவத்தினை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்**.

3.3 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் ஒப்பத்தை அரச கல்லூரியின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட சத்திய ஆணையாளர், சட்டத்தரணி/பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் பதவி வெளியிடப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட அடிப்படை வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரச நிரந்தர சேவையில் உள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.4 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.05.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் - 2013 (சிங்களம், தமிழ், ஆங்கில மொழி)" எனக் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

3.5 பூரணமான முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்படும்போது விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைப்பது தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3.6 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவுறுத்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னர் அனுமதி அட்டை கிடைக்காது இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியையும். பதிவுத்தபாலிட்ட பற்றுச்சீட்டையும், கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும்.

**4. பரீட்சைக்குப் பிரவேசித்தல் :**

4.1 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளருக்கு கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

4.2 பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சைகளுக்குரியதான அனுமதி அட்டைகளில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் உள்ள மண்டபப் பொறுப்பாளருக்குக் கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குக் கோவைகள் இவ்வர்த்தமானி அறிவித்தலில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்பட வேண்டியேற்படும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொண்டல்ல.

5. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள்**.- தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

**6. உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை :**

6.1 பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச்செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

7. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி** :

7.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமும் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

7.2 ஆங்கில மொழிமூல வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழிமூலம் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலப் பாட வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தாய்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

8. **பாடப் பரிந்துறை**.- இப்பரீட்சையின் இரு வினாத்தாள்களும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடையை எதிர்பார்க்கும் வினாக்களாகும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வினாப்பத்திரத்துக்காகத் தோற்றுவது கட்டாயமாகும்.

(1) நுண்ணறிவுப் பரீட்சை.- (நேரம் : 1 1/2 மணித்தியாலம்)
- 100 புள்ளிகள்

பரீட்சார்த்தியிடம் ஆசிரியத் தொழிலுக்கான தகைமைகள் மற்றும் தர்க்க ரீதியிலான அறிவு, தீர்மானம் எடுப்பதற்கான இயலுமைகளை அளவீடு செய்யும் நோக்கில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய 60 கேள்விகளைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(2) பொது அறிவு.- (நேரம் : 1 1/2 மணித்தியாலம்)
- 100 புள்ளிகள்

பொருளியல், அரசியல், கல்வி கலாசார, விஞ்ஞான மற்றும் விளையாட்டுத் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சமகால சம்பவங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அளவினைப் பரிசீலிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கும் வடிவிலான முறையில் 75 கேள்விகளைக் கொண்ட வினாத்தாள். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். வருமானத் தலைப்பிலக்கம் 2003-02-13 இன்கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பேரில் எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகத்திலும் நிதி செலுத்தி விண்ணபதாரியின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி அப்பற்றுச்சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும். (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

10. **விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கான ஆலோசனைகள்**.- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது கீழுள்ள அட்டவணைக் கமைய பாடங்கள் மற்றும் பாடங்களுக்குரிய குறியீட்டு இலக்கங் களைக் குறிப்பிடவும். இதற்கமைய பட்டத்துக்காகத் தொடர்ந்த பிரதான பாடம் அல்லது பாடங்களுக்குரியதாக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**அட்டவணை 1**

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 02 |
| தமிழ் | 03 |
| ஆங்கிலம் | 04 |

**அட்டவணை 2**

| பாடங்கள் | வெற்றிட எண்ணிக்கை | பாடத்துக்குரிய குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| புவியியல் (சிங்கள மொழி) | 22 | 11 |
| புவியியல் (தமிழ் மொழி) | 13 | 12 |
| புவியியல் (ஆங்கில மொழி) | 20 | 13 |
| வரலாறு (சிங்கள மொழி) | 40 | 21 |
| வரலாறு (தமிழ் மொழி) | 14 | 22 |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் (சிங்கள மொழி) | 33 | 31 |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் (தமிழ் மொழி) | 16 | 32 |
| சித்திரம் (சிங்கள மொழி) | 14 | 41 |
| சித்திரம் (தமிழ் மொழி) | 13 | 42 |
| நாடகம் மற்றும் நடனக்கலை (சிங்கள மொழி) | 22 | 51 |
| நாடகம் மற்றும் நடனக்கலை (தமிழ் மொழி) | 04 | 52 |
| மனைப்பொருளியல் (சிங்கள மொழி) | 23 | 61 |
| மனைப்பொருளியல் (தமிழ் மொழி) | 07 | 62 |
| தகவல் தொழில்நுட்பம் (சிங்கள மொழி) | 13 | 71 |
| தகவல் தொழில்நுட்பம் (தமிழ் மொழி) | 18 | 72 |
| தகவல் தொழில்நுட்பம் (ஆங்கில மொழி) | 24 | 73 |
| பொருளியல் (சிங்கள மொழி) | 29 | 81 |
| பொருளியல் (தமிழ் மொழி) | 19 | 82 |
| பொருளியல் (ஆங்கில மொழி) | 18 | 89 |
| வர்த்தகக் கற்கை (சிங்கள மொழி) | 30 | 91 |
| வர்த்தகக் கற்கை (தமிழ் மொழி) | 06 | 92 |
| வர்த்தகக் கற்கை (ஆங்கில மொழி) | 18 | 93 |
| கணக்கியல் (சிங்கள மொழி) | 31 | 111 |
| கணக்கியல் (தமிழ் மொழி) | 19 | 112 |
| கணக்கியல் (ஆங்கில மொழி) | 29 | 113 |
| பௌதீகவியல் (சிங்கள மொழி) | 48 | 121 |
| பௌதீகவியல் (தமிழ் மொழி) | 32 | 122 |
| பௌதீகவியல் (ஆங்கில மொழி) | 16 | 123 |
| இரசாயனவியல் (சிங்கள மொழி) | 26 | 131 |
| இரசாயனவியல் (தமிழ் மொழி) | 32 | 132 |
| இரசாயனவியல் (ஆங்கில மொழி) | 22 | 133 |
| உயிரியல் (சிங்கள மொழி) | 15 | 141 |
| உயிரியல் (தமிழ் மொழி) | 18 | 142 |
| உயிரியல் (ஆங்கில மொழி) | 21 | 143 |
| இணைந்த கணிதம் (சிங்கள மொழி) | 11 | 151 |
| இணைந்த கணிதம் (தமிழ் மொழி) | 26 | 152 |
| இணைந்த கணிதம் (ஆங்கில மொழி) | 15 | 153 |
| விவசாயம் (சிங்கள மொழி) | 24 | 161 |
| விவசாயம் (தமிழ் மொழி) | 15 | 162 |
| ஆங்கிலம் | 34 | 171 |

11. தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப் பத்தில் இல. 7 தலைப்பின்கீழ் தமது திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

12. நேர்முகப் பரீட்சைக்காக உரிய தினத்தில் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரிகள் தொடர்பில் பின்னர் எக்காரணங்கொண்டும் மீளக் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

13. அத்துடன் நேர்முகப் பரீட்சை தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

14. இவ்வறிவித்தலில் உட்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களில் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாது இருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்விச் செயலாளருக்கு உரியதாகும்.

எஸ். எம். கோடாபய ஜயரட்ண,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பயன்பாட்டுக்காக

கல்வி அமைச்சு

தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் - 2013
(சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் மொழிமூலம் இல.

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

(அறிவித்தலின் 10 ஆவது வாசகத்துக்கு அமைய உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

| பாடங்கள் | பாடத்துக்குரிய குறியீட்டு இல. |
|---|---|
| | |
| | |
| | |

(அறிவித்தலின் அட்டவணை 2 இற்கமைய உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில், உ-ம் : PERERA A.B.) :----.

1.2 முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்குத் தபாலிடப்படும்)

3. 3.1 பால் : ஆண்/பெண் (பெண்-1, ஆண்-0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர்
திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

3.4 2013.05.03 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.5 தேசிய அடையாள அட்டை இல. :

4. உயர் கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

4.1 பட்டம் :----.
4.2 வழங்கிய பல்கலைக்கழகம் :----.
4.3 பட்டம் செல்லுபடியாகும் தினம் :----.
4.4 பட்டம் தொடர்ந்துள்ள பிரதான பாடம்/பாடங்கள் :----.
4.5 பட்டம் பெற்றுள்ள மொழி :----.

5. 5.1 செலுத்தப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் (எழுத்தில்) ரூபா : ----.
5.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
5.3 வழங்கிய அலுவலகம் :----.
5.4 திகதி :----.

பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தாங்கள் வைத்துக்கொள்ளவும்.
பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானது எனத் தெரிவிக்கிறேன். இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் என்னைச் சேவையிலிருந்து நீக்கக் கட்டுப் படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகத் தெரிவிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றியமைக்க மாட்டேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு./திருமதி/ செல்வி ............................................................ அவர்களை நான் தனிப்பட்ட அடிப்படையில் அறிந்துள்ளேன் என்றும், அவர் என் முன்னிலையில் ........................................ ஆந் திகதி கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும், பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*7. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின், திணைக்களத் தலைவரின் உறுதியுரை**.- திரு./திருமதி/செல்வி ......................................... அவர்களின் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இவ்வமைச்சின் நிரந்தர/தற்காலிக/சமயாசமய ஊழியராகச் சேவையாற்றுவதாகவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் குறிப்பிடுகிறேன்.*

----,
*திணைக்களப் பொறுப்பாளரின் அல்லது*
*அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.*

*பதவி* :----.
*அமைச்சு/திணைக்களம்* :----.
*திகதி* :----.

*4-479*